*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume VIII (2)**
**May - 2024**

# இலக்கியங்கள் காட்டும் போர்

இராக்கு, க
உதவிப் பேராசிரியர்,
சிக்கய்ய நாயக்கர் கல்லூரி,
ஈரோடு - 638 004.

**Corresponding Author's mail ID:** rakkucnc@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனித இன வரலாற்றில் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வோர் இயல்பும் சிறப்பாகப் போற்றப்படுகிறது. இவ்வியல்பினை அவ்வக்கால இலக்கியங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் போரே தலைமையும் முதன்மையும் எய்தியிருந்ததாகத் தெரிகிறது. சங்ககாலத்தில் வீரம் மிக்கவர்களே சிறப்பிற்குரியவர்களாகக் கருதப்பட்டனர். வீரத்தை நிலைநாட்டுவதற்குப் போரே உன்னதக் கலையாக நம் மக்களிடையே போற்றப்பட்டது. இவ்வகையில் போர்ச்சிறப்பு, போர்க்கலையின் தன்மை மேன்மைகள், போர் ஏற்படுவதற்கான காரணங்கள், போர் நிலைகள் போன்றவை இவ்வாய்வின் சுருக்கமாக அமைந்துள்ளது.

**குறிப்புச்சொற்கள்**

**போர்ப்பண்பாடு, பொருதல், தூதுபோதல், தூதுரைப்பான் பண்பு, போர் நடவடிக்கை, போர் அறம், போர்நெறி இவை போன்ற (திறவுச் சொற்களாக) குறிச்சொற்களாக அமைகின்றன.**

## முன்னுரை

பன்னெடுங்காலமாகத் தமிழர்களின் அடையாளமாகக் காதலும் வீரமும் முக்கியப் பண்புகளாகக் கடைப்பிடிக்கப்பட்டமையை நமது அக, புற இலக்கியங்கள் நமக்குப் பறை சாற்றுகின்றன. வீரயுக மரபான தமிழர் மரபு பற்றிப் பேசும் புற இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டுப் பெட்டகமாக விளங்குகின்றன. இலக்கியங்கள் காட்டும் போர் பற்றிய கருத்துகளைக் கால எல்லை கருதி புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு போன்ற நூல் கருத்துக்கள் மட்டும் ஆராயத்தக்கதாக இங்கு அமைகின்றன. “போர் வயிற்பிரியும் மற்காதலனைத் தடுப்பர் போல இலக்கியச் சான்றோ இலக்கணக் குறிப்போ ஒன்று கூட இல்லாமை உன்னத்தக்கது” என்று கூறுவார் க.ப.அறவாணன்,[1] என்பார். இலக்கிங்கள் உணர்த்தும் போர் பற்றிய கருத்தாக்கங்களை ஆய்வது இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

**போர் பற்றிய கருத்தாக்கங்கள்**

போர் என்பது பண்பாட்டுக் கூறாகும். போர் என்னும் பெயர்ச் சொல் காரண இடுகுறிப் பெயராக வழங்கலாம். போர் என்னும் சொல் ‘பொரு’ என்னும் வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல் ஆகும். போரானது உடல் வலிமையைக் கொண்டுதான் உறுதி செய்யப்பட்டது என்பதை மறுக்க இயலாது. போரில் வென்றவருக்குச் சிறப்பும் புகழும் வந்து சேரும். இதனைத் திருவள்ளுவர் ‘படைமாட்சி’ என்னும் அதிகாரத்தினுள் விளக்கியுள்ளார்.

**“உறுப்பமைந்து ஊரஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையுள் எல்லாம் தலை”**
**(குறள், 761).**

“எல்லா உறுப்புகளும் நிறைந்ததாய் இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை, அரசனுடைய எல்லாச் செல்வங்களைவிடச் சிறந்ததாகும்” - (மு.வரதராசனார் இலக்கியத்திறன்).

எனவே, இதிலிருந்து படையின் முக்கியத்துவத்தை அறிய முடிகிறது. போரில் விழுப்புண் பெறவேண்டும் அதுதான் ஒரு வீரருக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்பதை வள்ளுவர் கீழ்க்காணும் குறள் வழி வலியுறுத்துகிறார்.

**“விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்**
**வைக்குந்தன் நாளை எடுத்து”**
**(குறள், 776).**

‘போர்’ என்னும் சொல் ‘பொரு’ அல்லது ‘பொருவுதல்’ எனும் சொற்களிலிருந்துப் பிறந்த சொல்லாகும். அவ்வகையில் போர் என்பது ஒப்புதல் அல்லது ஒத்திருத்தல் எனப் பொருள்படும். இரு நாடுகளுக்கிடையே ஏற்படும் மோதலே போர் என்று கூறலாம். போர் பற்றிய பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளைப் பற்றிப் பேசும் தொல்காப்பியர் ‘போர்’ என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்”. (அரங்க. இராமலிங்கம் சங்க இலக்கியத்தில் வேந்தர் ப.124) என்பார்.

**போர் ஏற்படுவதற்கான காரணங்கள்**

நாட்டில் போர் ஏற்படுவதைத் தடுக்கவும் முடியாது தவிர்க்கவும் முடியாது என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள். அது அரசர்கள் மற்றும் மனிதர்களின் பிறப்போடு தொடர்புடையது என்றும் தெரிவிக்கின்றனர்.

“டார்வின் போன்ற அறிஞர், உயிரினமானது தன்னை நிலை நிறுத்திக் கொள்ளுவதன் மூலமும், தகுதியுடையவை நிலைபெறுதல் ஆகிய இரண்டு காரணங்களின் அடிப்படையில் தான் போர் நிகழ்கிறது என்கிறார். உளவியல் அறிஞர் சிக்மெண்ட் பிராய்டு, தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டும் என்ற மன இயல்பே போருக்கான காரணம் என்கிறார். அறிஞர் டால்ஸ்டாய் “போர்ச் செயல் குற்றமுடையது” என்கிறார். அது பாவகரமானது என்றும் போரிடுவது முட்டாள்தனமானது” என்ற கருத்துகளைத் தேவநேயப்பாவாணர் எடுத்துக்காட்டுவார். (தேவநேயப்பாவாணர், பழந்தமிழர் அரசியல் கோட்பாடுகள், ப -122)

வெளிநாட்டு அறிஞர்களின் கருத்துக்கள் இவ்வாறிருக்க, நமது இலக்கியங்களோ மண்ணாசை,

பொன்னாசை, பெண்ணாசை ஆகியவைதான் போருக்கான முக்கிய காரணங்களாக அமைகின்றது என்று குறிப்பிடுகின்றன. ‘ஆசையே அழிவிற்குக் காரணம் என்கிறார்’ புத்தர் இவை மூன்றினையும் விட்டொழித்தால் இறைவனை அடையலாம் என்றும் கூறுகிறார்.

**‘மண்ணாசை வெற்ப மறிகடலே பொன்னாசை**
**பெண்ணாசை ஒன்றேஎன் பேராசை - நண்ணாசை**
**விட்டார் புகழும் விடையாய்நான் பொய்யாசைப்**
**பட்டால் வருமே பதம்”.**

(திருவருட்பா, சிவநேய வெண்பா, திருமுறைகள், பா எண் 15) என்கிறார் வள்ளலார்.

நிலத்தின் பால் உண்டாகும் ஆசை மண்ணாசை. இது அரசர்கட்கு நாடு பெருக்குவதில் உள்ளது. அதே போன்று செல்வந்தர்களுக்கு நிலம் பெருக்குவதிலும் ஆசை மிகுந்த வண்ணம் இருக்கும் என்கிறார் வள்ளலார். வெற்பு, மலை மக்கட்குப் பொன்மேல் உண்டாகும் ஆசை அளப்பரியது. அதனால் அதனைக் கடலோடு ஒப்பிடுகிறார். பின்னர், பெண்ணாசை கொண்டிருப்பது ஏனைய இரண்டினைக் காட்டிலும் பெரியது. பெண்ணாசை ஒன்று தான் பேராசை என்று கூறும் வள்ளலார் இம்மூன்றினையும் விட்டொழித்தால் இறைவனை அடையலாம் என்றும் கூறுகிறார்.

## போர்க்கு முன்தூது போதல்

தாம் உணர்த்த நினைத்தவற்றைக் கடிதம் அல்லது ஆள் வாயிலாக அறிவிப்பதே தூது எனப்படும். படையுதவி வேண்டியும், சமாதான ஒப்பந்தத் தேவைக்காகவும் போரில் தூது பயன்படுத்தப்படுகிறது. புறாக்கள் வழியும் தூது அனுப்பப்பட்டுள்ள செய்திகள் இலக்கியத்தில் காணப்படுகின்றன. தூது எடுத்துச் செல்லும் செய்தி ஊடகங்கள் கடிதம், ஓலை, லிகிதம், மடல், முடங்கல், திருமுகம் ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டன. சங்க இலக்கிய அகம் மற்றும் புறம் நூல்களில் தூது இடம் பெறுவதைக் காண முடிகிறது. ஔவையார், கோவூர்க் கிழார், எயிற்றியனார் போன்ற புலவர்கள் அரசியல் தூது சென்று மன்னர்களைச் சந்தித்து ஆற்றுவித்துப் போர் அழிவினைத் தடுத்த செய்திகளைப் புறநானூறு தருகின்றது என்பதனை “ஆட்கள் ஓலை கொண்டு ஓடிச் செல்வதினால் அவர்களை ஒட்டக்காரன் என்றே அழைத்துள்ளனர், ஒட்டக்காரன் கதை, ஐவர் ராசாக்கள் கதை ஆகியவற்றில் இத்தகைய ஒட்டக்காரன் மிக முக்கிய பாத்திரங்களாக விளங்கியுள்ளனர்.”[6]

போருக்கு முன்பு தூதின் மூலம் இரண்டு நாட்டு மன்னர்களும் பேச்சு வார்த்தையின் மூலம் கலந்து பேசி தீர்த்துக் கொள்வது என்பது ஒரு மரபு பேச்சு வார்த்தை சுமூகமாக முடிந்து விட்டால் போர் ஏற்படாமல் இரண்டு நாட்டு மக்களும், இருநாட்டின் பொருளாதாரச் சீர்குலைவும் ஏற்படாது என்பதில் உறுதியாக இருந்தனர். அதனால் தான் போருக்கு முன்பு தூது செல்லுதல் மரபாக இருந்தது. தூது என்பது ஓர் அரசர் கூறும் செய்தியினை அடுத்த அரசர் அல்லது

பகை அரசரிடம் கொண்டு சென்று சேர்ப்பதாகும்.

"ஒரு வேந்தனின் சார்பாளராக மற்றொரு வேந்தனின் அரசவையில் செயல்பட்டவர் தூதர் எனப்பட்டார். தூது அனுப்புதல் சங்க காலத்தில் இருந்தது" (அரங்க இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.219) என்பதைச் சங்க இலக்கிங்கள் தெரிவிக்கின்றன என்கிறார் இராமலிங்கம்.

## தூதரரின் பண்பு

**"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்**
**பண்புடைமை தூதுரைப்பான் பண்பு"**

**(குறள், 681).**

என்கிறார் வள்ளுவர். அதாவது தூது செல்பவர் பண்புடையவராகவும், அன்புடையவராகவும் இருத்தல் வேண்டும் என்றும் அவர், உயர்ந்த குடியில் பிறந்தவராக இருக்க வேண்டும் என்றும் அனைத்துத் தகுதிகளும் பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றார் வள்ளுவர். அப்போதுதான் தூது செல்பவன் போர் ஏற்படாமல் தடுக்க முடியும் என்று தெரிவிக்கிறார்.

சங்க இலக்கியத்தில் தூதுவர் பற்றிய குறிப்பாகப் புறநானூறு.

**"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்**
**உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்**
**எல்லி வந்து நில்லாது புக்குச்**
**சொல்லிய சொல்லோ சிலவேயதற்கே"**

**(புறம் பா.305).**

என்கிறது. அகநானூற்றுப் பாடல் ஒன்று பார்ப்பான் என்பவன் பலமுறை தூது சென்றதைக் குறிப்பிடுகிறது. இதனை,

**"தூது ஒய் பார்ப்பான் மடி வெள் ஓலைப்**
**படையுடைக் கையர் வருதொடர் நோக்கி"**

(அகம் நித்திலக்கோவை, அடி, 7-8,பா, 337) என்ற அடிகளால் அறியலாம். சிலப்பதிகாரம் ஆயிரம் தூதுவர்களை நியமித்ததாகக் கூறுகின்றது.

**"கஞ்சுக முதல்வர் ஈர்-ஐஞ்ஞூற்று வரும்"**

**(சிலம்பு, 26:138-139).**

சங்க காலத் தமிழர்களின் போர் மரபுகள் அறப்போர் முறையைச் சார்ந்தவை. சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள போரியல் பதிவுகள் யாவும் பண்டைத் தமிழர் நிலத்தில் நிகழ்ந்த உண்மை வரலாற்றுக்கு முக்கியச் சான்றாக அமைகின்றன. பண்டை போர் முறைகளில் வஞ்சகம், சூழ்ச்சி, கெடுதல் போன்ற தீய எண்ணங்களைக் கண்டறிவது கடினம். நேர்மையை முழு மூச்சாகக் கடைப்பிடித்த தமிழர் போர் முறைகளிலும் கூட அவற்றைப் பின்பற்றினர். சில வரலாற்று ஆசிரியர்களின் கூற்றின்படி மன்னர்கள் அல்லது மறவர்கள், நாட்டின் பாதுகாப்பிற்கு நாட்டின் வளத்தையும் மேன்மையையும் கட்டிக் காப்பாற்றிடப் போர் முறைகளைக் கையாண்டனர் என்பதையும் அறியமுடிகிறது.

## போர் நடவடிக்கைகள்

'தொல்காப்பியம் தவிர்த்துச் சிலப்பதிகாரம் போன்ற பிற்கால இலக்கியங்களை ஆராய்ந்து பார்த்தபோது போர் தொடங்கத் தீர்மானித்த பின்னரே படைக்கான போர் வீரர்களைத் திரட்டுவதற்குத் தூதுவர்களை அனுப்புவது

வழக்கமாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

பொதுவாகத் தமிழர்களின் மரபுப்படி "எந்த ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்பும் நல்ல நேரம் அதாவது நனி நிமித்தம் பார்ப்பது ஒரு வழக்கமாக இருந்துள்ளது".[8] (நா.பழனிவேலு சங்கபுற இலக்கிங்களில் சமூகச் சித்தரிப்புகள் ப.35) அதே போல் மன்னர்களும் படைகளைப் போருக்கு அனுப்புவதற்கு முன்பு நல்ல நேரம் பார்ப்பர் என்ற குறிப்புகளைப் புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்து தெரிவிக்கின்றது.

**போர் அறம்**

ஓர் அரசனுடைய கடமையானது நாட்டு மக்களைப் பாதுகாத்தல் ஆகும். அதிலும் குறிப்பாகப் போர்க் காலங்களில் உயிர்களைப் போற்றிப் பாதுகாப்பதும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும் ஒரு வேந்தனின் முக்கியப் பங்காகும். இதனை,

**"எம் அம்பு கடி விடுதும் நும் அரண் சேர்மின்"**

**(புறம்.9).**

என்ற புறநானூற்றுப் பாடலால் அறியலாம். அதாவது அரசன் மக்களிடத்தில் கூறுகையில்'' நாங்கள் அம்புகளைச் செலுத்திப் போர் செய்ய உள்ளோம்'. ஆகையால் மக்களாகிய நீங்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்தைச் சென்று அடையுங்கள்' என எச்சரிக்கை செய்யும் பாங்கினை அறியமுடிகிறது. போர் பல இழப்புகளை ஏற்படுத்தும் ஆயினும், அதில் பெருமையைச் சேர்த்தது தமிழ்ச் சமூகமாகும். போர் நடைபெறும் காலத்து அறம் வழுவாமல் போர் செய்தனர். போர் அறம் குறித்து கி.வா.ஜகந்நாதன், "மனிதனுடைய அறிவு படைவகை அழிக்கும் திறத்தில் ஈடுபடுகிறது, அதனால் மனித சமுதாயத்தின் போரில் சில நாகரிக முறைகள் அமைகின்றன. ஒருபால் போரே நிகழாமல் அமைதியை நிலைநிறுத்த வேண்டும் என்ற கருணையும் படர்ந்து வருகின்றது, போரை அறவே தடுத்து நிறுத்தாவிட்டாலும் போரிலும் சில வரையறைகளைக் கடைப்பிடிக்கும்படிச் செய்தனர். போரில் உள்ள தர்மங்கள் அல்லது வரையறைகளும் இத்தகையனவே. போரை அறவே ஒழிக்க இயலாத நிலையில் எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் இருப்பதற்குரிய வழித்துறைகளைச் சான்றோர்கள் வகுத்தார்கள். ஆதலின் போரிலும் அறப்போர் என்ற வகை உண்டாயிற்று" என்கிறார். (கி.வா.ஜகந்நாதன் - வீரர் உலகம் பக் 17-18).

காலை சூரிய உதயத்தின் போது முரசறைந்து சொல்வது போர் நெறியாகும். சூரியன் மறையும் வரை மட்டும் போர் நடைபெறும். பின்னர் முரசறைந்து போரினை நிறுத்துவது மரபாகும் என போர் முறைகளை வில்லிபாரதம் கூறுகிறது.

**"துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதோர்**
**கன்று சினமனத் தோர் கல்லாதவர் இளையோர்**
**ஒன்றும் முறைமை உணராதவர் மகளிர்**
**என்றும் இவர் மந்தணத்தின் எய்தப் பெறாதாரே"**

**(வில்லிபாரதம் 27:50).**

என்று கூறுவதால் நோயுற்றவர்கள், துறவிகள், மூத்தோர் சொல்லும் கல்விக்குக் கட்டுப்படாதோர், மிகுந்த கோபம்

உடையவர்கள், கல்வி அறிவு இல்லாதவர்கள், வயதில் குறைந்தவர்கள், நீதிமுறை பற்றி அறியாதவர்கள், பெண்கள் ஆகியோர் இரகசிய ஆலோசனை செய்யும் இடத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர்களாக வில்லிபாரதம் கூறுகிறது. போரால் பல இழப்புகள் ஏற்படுவதாலும் போரில் அறத்தை மேற்கொண்டு தமிழர் தனக்கெனத் தனி இடத்தைப் பெற்றிருந்தனர்.

### போருக்குப் புறப்படுதல்

போர் மேல் செல்லும் மன்னன் அதற்கு முன் தன்னையும், தன் படைகளையும் தயார் செய்து கொள்வான். அதன் பிறகு நற்சொல் கேட்டல் என்பது வழக்கம். போருக்குப் புறப்படுவதற்கு முன்பு மணமிக்க மலர்களை நெல்லுடன் தூவிக் கைதொழுது வணங்கி விரிச்சி கேட்டதைச் சங்கப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. மேலும் ஒருவன் போர் செய்வதற்குப் பொருத்தமான காலத்தைத் தேர்ந்தெடுத்து, இடத்தோடு பொருந்த ஒரு செயலைச் செய்யும் திறன் பெற்றவனாயிருப்பின் அவனால் உலகத்தை ஆள வேண்டும் என்று நினைத்தாலும் அது நடந்துவிடும என்கிறார் வள்ளுவர். இதனை,

**“ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்”**

**(குறள்,101)**

என்று குறிப்பிடுகிறார்.

### போர் விதிமுறைகள்

போர் என்பது தகுந்த விதிமுறைகளைப் பின்பற்றி வெற்றி பெறுவதையே உணர்த்துவதால் அதுவே வீரப் பண்பாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. போருக்கான காரணங்கள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால் அது மரபு மீறப்படாத நேருக்கு நேரான தாக்குதலாக அமைய வேண்டியது அவசியமாகிறது. போர் எவ்வகைப்பட்டதாக அமைந்திருந்தாலும் அது போரில் மிக்கவர்களால் தர்மத்தின் அடிப்படையில் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டே மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய விதிமுறைகளை இதிகாச போர்களும் எடுத்துரைக்கின்றன.

போர்க் களத்தில் ஆயுதம் ஏந்திப் போர் புரியும் வீரன் ஒருவன் ஆயுதம் எடுத்துப் போர் புரிவதற்கான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். ஆயுதம் இல்லாத வீரனுடன் எதிர்த்துப் போரிடக் கூடாது என்பது விதியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. ‘வீரம் இல்லாதவர்களிடமும், பலம் அற்றவர்களிடமும் போரிடும் மரபு இல்லை. அதே போல் போரில் காயம்பட்டு போர்க்களத்தில் இருந்து வெளியேறிய வீரனைத் தாக்கக் கூடாது. ஆயுதம் இல்லாமல் போர் செய்ய வரும் வீரனுடன் போர் செய்யக்கூடாது’. குதிரைப்படை குதிரைப்படையுனும், தேர்ப்படை தேர்ப்படையுடனும், காலாட்படை காலாட் படையுடனும் போர் புரிதல் வேண்டும். இது வரையறுக்கப்பட்ட விதியாகும். போர்க்களத்தில் மகாரதர்கள் மகாரதர்களுடனும், அதிரதர்கள் அதிரதர்களுடனும் மட்டுமே போரிட வேண்டும். மாற்றாறிடம் போர் புரிதல் கூடாது. போர்க் காலங்களில் இரவு நேரங்களில் பகை நாட்டினர் ஒருவரைச் சந்திக்க விரும்பினால் சந்திக்கலாம். இதனை,

**"ஏதில் இருள் புக்குல வலாம் இடம்அறக்-**
**கடையின்**
**ஏறு அனலி ஒத்தது இகலிப்**
**பாதகம் மிகுந்த கொலை வாள் நிருபர்தத்தமது**
**பாடி நகர் புக்க னர்களே"**

**(வில்லிபாரதம் 30. இரண்டாம் போர்ச்சருக்கம்).**

போர்க்களத்தில் நடந்த போரினால் ஏற்பட்ட இரத்தப்பெருக்கால் எல்லாத் திசைகளிலும் கரிய கடலும் பூமியும் சிவந்தது என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

"போர் என்பது ஒரு தலைச்சிறந்த கலையாகும். போரில் வெற்றி திட்டமிட்டுச் செயல்படுவதில் தான் அடங்கியுள்ளது. போர் ஓர் வாழ்க்கை - வாழ்வு ஒரு பக்கம், மரணம் ஒரு பக்கம், இதில் உயிர் என்பது பாதுகாப்பு". (அ.அப்துல் ரஹமான், போர் என்னும் கலை, ப.1) என்கிறார்.

போர் என்பது தமிழர்களின் பண்பாட்டுக்கூறாகும். இது உடல் வலிமையைக் கொண்டு உறுதி செய்யப்பட்டது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை போன்றவைகளே போர் எழுவதற்கான காரணமாக அமைந்தன. இலக்கியங்கள் போரினால் ஏற்படும் அழிவுகளையும், போர் தவிர்த்தல் நல்லது எனவும் எடுத்துக்காட்டுகின்றன. தூது செல்வது என்பது இருநாட்டவரது போருக்கான முன்னேற்பாடுகளைத் தொடங்குவதற்கான பண்பாக இருந்திருக்கிறது. சங்ககாலப் போர்முறையானது அறப்போர் முறை சார்ந்ததாகவே அமைந்திருந்தது. நாட்டுமக்களையும் அந்நாட்டு மண்ணையும் பாதுகாப்பதற்கு போர் புரிவது அவசியம் என்ற நிலை இருந்திருக்கிறது. இப்போர்ரனது தகுந்த விதிமுறைகளைப் பின்பற்றி நடைபெற்று வந்ததால் வீரத்தின் தலையாய பண்பாகக் கருதப்பட்டது.

## அடிக் குறிப்புகள்


1. அறவாணன், க.ப., (1978). அற்றைநாட் காதலனும் வீரமும், தமிழ்க்கோட்டம் பதிப்பு முதற்பதிப்பு.
2. அப்துல் ரஹ்மான், அ. (1972). போர் என்னும் கலை, மொழி பெயர்ப்பாசிரியர் முதற்பதிப்பு.
3. இராகவ ஐயங்கார், ரா. (1979). தமிழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூன்றாம் பதிப்பு.
4. பெருமாள், அ.நா., (1987). தமிழில் கதைப் பாடல்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.
5. வுரதராசனார், மு. (1998). இலக்கியத்திறன், பாரி நிலையம், சென்னை.
6. பழனிவேலு, நா. (2004). சங்கப் புற இலக்கியங்களில் சமூகச் சித்தரிப்புகள் மனோன்மணி பதிப்பகம், கிருஷ்ணகிரி முதற்பதிப்பு.
7. ஜோதி, வ. (1998). (பதிப்பாசிரியர்) வியாச பாரதம், வர்த்தமானன் பதிப்பகம், முதற்பதிப்பு, சென்னை.